உ

ஸ்ரீவிநாயகாயநம:

ஸ்ரீ தண்டபாணிக்கடவுள் துணை.

புலத்தியபுரமென்னும் போரூருக்கடுத்த

திருநதிக்குன்றத்தின்கண் ணெழுந்தருளியுள்ள

ஸ்ரீ திருமணப்பிள்ளையார் பஞ்சரத்தினம்

ஸ்ரீ தண்டபாணிக்கடவுள் பதிகம்

ஸ்ரீபாலசுப்பிரமணியக்கடவுள் கீர்த்தனை முதலியன.

இவை

ஷை திருநதிக்குன்றநகர்

சீர்கருணீக ம-ள-ள-ஸ்ரீ சுப்பராயப்பிள்ளையவர்கள் குமாரர்

சு. கு. அரிபுத்திரப் பிள்ளையவர்களாலியற்றப்பட்டு,

வித்வான் வல்லநகர்

ம-ள-ள-ஸ்ரீ வைத்தியலிங்கம் பிள்ளையவர்கள்

பரிசோதித்து,

A. D. இராஜகோபால் பிள்ளையவர்களால்

தமது


வித்யாரத்நாகர அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டன.

வேலூர் :

1832 சாதாரண௵ மிதுனரவி.

1910.



உ.

சிவமயம்

சாத்துகவிகள்.

இராயவேலூர் துறைப்பாடி வித்வான்

ம-ா-ா-ஸ்ரீ

க. தெய்வசிகாமணி பிள்ளையவர்களியற்றிய

வெண்பா.

பதிக்குன்றமாகப் பயின்முருகனற்கு
நதிக்குனறந்தனையே நாடித்—துதிக்கினற
செந்தமிழினூசலுடன சீராலியெச்சரிகை
சந்தமிகுங்கீர்த்தனமுந் தாம்

நற்றிருமணப்பிள்ளை நாயகனேம்பாமணியு
மற்றண்டபாணியின்மேல் வண்பாவுஞ்—சொற்றூய
பரிசுத்தவாணாசெவிக சமுதாயபாய
அரிபுத்திரகசவிவ லான.

வல்லநகர் வித்வான்

ம-ா-ா-ஸ்ரீ வைத்தியலிங்கம் பிள்ளையவர்களியற்றிய

நேரிசை யாசிரியப்பா.

பொன்னனயகோகில மன்னியவகலனை
களங்கனிபோலும விளங்கி நணமெய்யா
ளியலுமுலலை யயிலுஞ்சேக்கை
வெயிலவிரிகாசு பயிலவுறா உளகூடு
மேலாக்கிடந்த வேலாவலயத்துக்
காப்பனகாதுக் கடிவலகடிந்து
மானறவினறிய சானரோர்குழீஇய
பணடையவணமைத தொணடைநாட்டுழிக
குண்டமபரத்து மணடம்வரப்பத
தொடுவேலவிடலை படிவாயளித்த
நெடுநீரப்பாகு வடுவகனுகை
கனநதலைநாளுங் கனந்தவாதூரும்
பல்குனறகோட்டப் பங்களநாட்டி
னுற்பெருங்குடியு நணணிக்கவின

பொன்னேமுதலாம் பொருளின்பெருக்கு
மலகுறாஉமபிற வளையாவளமு
மனறத்திசழுங் குன்றததூரொ
ளிராஜகம்பீ வெழினல்லூரி
னெஞ்சாககயல மஞ்சனப்பேரா
ளொருநதிவளைந்த திருநதிக்குன்றி
னுசசியிலொளிக்கு நச்சிளகரதது
நினறுளானமகரந் துன்றமபுதிகைக்
கொணடோருழுந்தி னுண்டவுரவோ
ஞனந்தவனத தானநதபுத்த
தேவபாணட பாவியகழகந்
தனனையொரீஇப் பொனனம்பொருப்புச
சிலையானிரசித நிலையமபுக்குத
தறபரிவிசைப்ப வெறபரனரூலத
தாள்வளைபாடை தரவங்கைக்கொடு
மீளாததக்கிணங் கோளாரவன
வாசங்கலந்து வீசிளந்தென்றன
மலயததிருநது மதியாவிருத
வமிழ்தாமுபபா றமிழ்நனிவிரித்த
வடக்கைம்புலத்துக் குடககோமுனிவ
னகப்பாறறிமிர முகப்பாற்றிததன
ளிலைதேர்விததுத தலைவாழவிநதான்
வரந்தொழுபிதயாம் பரததருட்கிரண
மொழுகுறசசதக மெழுதருபானு
வெணணுவாொணணியாங் குணணினைந்தருளுஞ்
செறபமானக கற்பகக்கானம்
பனிவளைக்கொம்பு பயநததிருகனி
காமறகனனரூற கோமொழிகுரவ
னெண்டகுஞான தண்டபாணி
யாமபிதானத தாமப்பிழம்பு
தனையுட்பராஅ யினையுறபவநோய்
தணிவானகருதி யணவாருழுவ
லாளுவனபிற கோளுலயமே
யாதியதிருப்பணி போதப்புரிந்து
மருணாசஞ்செ யருணாசலனு
மனையான்மருக னினியமால்விஜய
ராகவன்றூனுந் தாகமாக்கேட்ப

வோதப்பரமன வேதப்பரிபுரத்
தாஅட்டாமனைக் கீஅட்டாவலிற
பதிகஞ்சூர்ளிகை பளகறுலாலி
யூசலெசசரிகைகை யாசறுகீர்ததனங்
கும்மியஞ்சுவ்வி குலவுர்திருமணப்
பிள்ளைவிரும்பிக கொளளுமைம்மணிப்
பாவாமினையன வோவாவொணமை
காட்டுந்தமிழவாழ நாட்டார்நவிற்றிற
ஞைவிரியாய வகையுறப்புனைந்து
மறப்புளவிந்தப் பிறப்பிறபேறு
பெற்றனவனைப் பேசுதுங்கேண்மின்
றெநடருவார்வாழ புருடமங்கலததி
னேர்குலாவிய சீகருணீக
னலசலழகுதா ஞைபததம்பு
சூததிரனுகவாத் தீததகைவெறுத்த
சுப்பராயத தோனறலிசைதத
நோன்பானமலிந்த வானபயனபோலவா
னக்குன்றந்தா ரணணியவாழ்க்கையன
காணவீடடததா ஞணவமிகலாற
பலவியேயாங்கொள செலவமாமென்பாள
கறுாக்கினியன கண்ணோடமுளா
னறறாதமக்குப் பற்றும்பானமைய
னேதமினறெனவோர்ந தோதுவிததெயது
மூதியந்தனஞன மேதகவாழ்வோ
னனபெயறிவே யடககமேபொறையே
சாந்தமே யாதியதானணி
யரிபுத்திரனு மொருமிததிரனே.

ஆரணி ஜாகீர் காமக்கூர் தமிழப்பண்டிதா

ம-ள ள-ஸ்ரீ மு. சுந்தரமுதலியார் அவர்களியற்றிய

ஆசிரிய விருத்தம்.

அரிபுத்திரனறெனூற திருத்திக்குனமிலக
வடியவாககருணமழைபொழிங்
தரிபுதரியொடுவல லபைவளளிகரிபுதரி
யகமகிழமகிமையோங்கும
அரிபுததிராகணமீதவ வாலயவிசாரணைசெ
யருணுசலனவேணடலால்
ஆதிசேடன்முதலோா மெசசிடப்பாக்க
ளணிபெறசெயதணிந்தான

அரிபுத்திரன் றனைய னங்களுச்செயயர
னடிக்கமலமலரைமறவா
வரியசீர்க்கருணீக சுப்புராயனசுதன்
னரிபுத்திரனகொடையிலே
அரிபுத்திரனவலியி லரிபுத்திரனதிருவி
லரிபுத்திரன மதியிலே
யரிபுத்திரனகலையி லரிபுத்திரனபிறவி
யரிபுத்திரன்குனரோ.

புலத்திபபுரமென்னும் போளூரின்கண்ணெழுந்தருளியிருக்கும்
விடோபா எனவழங்கும் மஹான்
ஸ்ரீமத் பாலாநந்த சுவாமிகளின் பாதசேகரராகிய
ஸ்ரீமத் ப. ஆதிமூல சுவாமிகளியற்றிய
அறுசீர்க்கழி நெடிலடி யாசிரியவிருத்தம்

விறபனர்களபணிநதேத்ததும் விழுமியவானதிகருனறிஙள
விளககமேவு
மறபுதனுமணப்பிளளை யணிதணடபாணியெனு
மடிகன்மீது
கபகணடுஞசெந்தேனுங கைபபுறுமாதமிழப்பாககள
கதைத்தானகணடீர்
பறபலவாமவளககுலவு மர்நகரினரிபுதர
பாவலோனே.

வேலூர் சலவன்பேட்டையிலவசிககும தமிழப்பணடிதரும்,
ஷையூா முனிசிபலாபீஸ கிளாக்குமாகிய ம-ா-ா-ஸ்ரீ
வெ. செ. குப்புசாமி முதலியார் அவர்களியற்றிய
வெணபா.

திருநதிக்குனறூர்வாழ செஙவேணமகிழத
தருநயஙகொணறபதிகஞ சாறறி—யிருநிலததிற்
றனவினையைபபோககினுன் தககவரிபுதரன
பனனுசுப்புராயனசேய பாா.

ஆரணி ஜாகீர் சம்புவராயநல்லூர் சோதிடர்

ம-ள-ள-ஸ்ரீ

கவிராயர் மர. முனிசாமி பிள்ளையவர்களியற்றிய

ஆசிரிய விருத்தம்

காருலவுதிருநதிக்குன்றமதைநாளுங் கருத்தினிலமினைப்பவாகரு
கருணைபொழிதிருமணப்பிள்ளையார்மீதுங கதிததிலகுதண்டபாணி
சீருலவுதேவன்மீதும்பஞ்சரத்தினந் திகழ்பதிகமூசலோடு
செப்பரியலாலிமங்களமெச்சரிக்கையிவை சிறநதைதவிலனபுகொண்டு
தாருலவுகருணீகருலதிலகனடியர் தன்னிதம்பரவுமேலோன்
றனகமைகுணமுளசுப்புராயனசெய மாதவந்தனிலவதரித்தசீலன
னருலவுநற்றமிழையாயுமரிபுத்திர னெனப்பெயாதரித்தத்திரன
எண்ணரியபுலவர்கட்கினனமுதமாமென வியறறியசிட்டனனரோ.

காமக்கூர் தமிழ்ப்பண்டிதர் ம-ள-ள-ஸ்ரீ மு. சுந்தரமுதலியார்

மாணாக்கரும், சோலையப்பிள்ளை குமாரருமான

ம-ள-ள-ஸ்ரீ அண்ணாமலை பிள்ளையவர்களியற்றிய

நேரிசை யாசிரியப்பா.

தண்டலைசூழும் வண்டலைசிறந்த
குனறதனுறான மனறதெளிநதோர்
சாற்றுந்திவவிய சேதத்திரத்தமர்ந்த
சீர்மலிதிருமணப் பிள்ளையாரீதும
வேலார்முருக வேளின்மீதும
அனபார்பனுவலை யறிஞர்கடுதிக்கச்
சூட்டிமகிழ்ந்தான் மேட்டியாயொளிருஞ
சீகருணீகத திருமரபுதித்தோன
அலாசலவிருடி யரியநறகோத்திரன்
ஆபததம்ப வற்புதசூத்திரன்
தூயன்சுப்பு ராயன்பயந்த
அரிபுத்திர னெனவமரர்
சொல்சிவநேச சுகுணன்மாதோ.

காமக்கூர் தமிழ்ப்பண்டிதர் ம-ா-ா-ஸ்ரீ
மு. சுந்தர முதலியாரவர்கள் மாணாக்கரிலொருவரான
ஷையூர் சோதிடம் ம-ா-ா-ஸ்ரீ
நா. முனிசாமி முதலியாரவர்களாலியற்றிய

சந்தவிருத்தம்.

அத்தியாளிவளர்திருநதிக்கிரியி
லத்திமர்முகன்விசாகன்மே
லரியசொற்பொருளினோக்கமோடுபல
வழகுபாக்களையியற்றினன்
பத்தியோடுதிருநீறுவக்கமணி
பான்மையாயணியுநசையுளன்
பரிதிமதிமுளரிநேத்திரக்கடவுள்
பாதமுன்னுகுணபோதனும்
நத்தியெச்சமயமுஞ்சொலுஞ்சிவனை
நாடுசீர்கருணமரபினன்
ஞானநூலையுணர்சுப்பராயன்பெரு
நற்றவத்திலுருவற்றசேம்
சித்திபெற்றிடுமுபாத்தியாயனரி
புத்திரன்சினமிலாதவன்
செய்யசாந்தகுணதீரஞானமுறு
திண்ணியப்பிரியசீலனே,

ஆரணி ஜாகீர் காட்டுக்காநல்லூர் ஸ்கூல்மாஸ்டர் வித்வான்
ம-ா-ா-ஸ்ரீ
கணியம்பாடி லிங்காசாரியார் இயற்றிய

எண்சீர்க்கழி நெடிலடி யாசிரியவிருத்தம்.

சீர்கொண்டதண்டகநாட் டுள்ளீடான
செப்பரியபல்குன்றக் கோட்டத்துக்குள்
ளேர்கொண்டபங்களநாட் டின்குன்றத்தூர்
எனும்ராஜகெம்பீர நல்லூர்மேய
சூர்துண்டுசெய்தண்ட பாணியின்மேல்
சொற்றூனோர்பதிகமும்பல் பாட்டுமன்னோன்
பேர்கொண்டகருணீக சுப்பராயன்
பெற்றவரிபுத்திரனும் பெரியோன்மாதோ.


வேலூரில் வசிக்கும் சுகர்நாடி சோதிடம்

ஓசூர்

ம-ா-ா-ஸ்ரீ சுயம்பிரகாச பிள்ளையவர்களியற்றிய

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரியவிருத்தம்.

பார்பூத்தநதிக்குன்றச் சிகரமிசையொளிர்தண்ட
  பாணியோடு
கார்பூத்தமாமுகத்துக் கடவுடிருமணப்பிள்ளை
  கழற்கணன்பாய்
ஏர்பூத்தபதிகமுமைம் மணிப்பாவும்பிறவுநனி
  யிசைத்தணிந்தான்
நார்பூத்தவர்கள்வா ழீபுதூர்ச்சௌரகுல
  நாவலோனே.



உ

ஸ்ரீவிநாயகாயநம:.



திருநதிக்குன்றத்தின்கண் ணெழுந்தருளியிருக்கும்

ஸ்ரீ திருமணப்பிள்ளையார்

பஞ்சரத்தினம்.

காப்பு வெண்பா.

ஏரார்நதிக்குன்றி னில்வாழ்திருமணப்
பேராருமானைமுகப் பெம்மான்ற—னீராரும்
பங்கயத்தாட்குப் பகர்பஞ்சரத்தினத்திற்
கங்கணையான்றுளே யரண்.

நூல்.

ஆசிரிய விருத்தம்.

நீர்பூத்தபங்கயனு நெடுமாலுநாடரிய
நிமலனுமிடங்கலந்தே
நீடுலகனைத்தினையு மேயீன்றளித்தருளு
நிமலியுமளித்தமதலாய்
வார்பூத்தசித்தியும் புத்தியும்பாங்கரின்
மகிழ்வாயிருக்கவனமார்
மடிமீதிலேவல்ல பையைவைத்தநாதனே
மங்கலம்பெருநீதனே

சீர்பூத்தவேதாக மங்களெஞ்ஞான்றினுந்
தேடித்துதிக்குமுதலே
சிந்தையிலிருந்துவளர் பந்தபாசத்தினைத்
தீர்த்தருளலென்றுசொல்லோ
தேர்பூத்தவாயிரங் கிரணப்பதங்களுந்
திங்களு[illegible]தும்
சென்றுதிருநின்றுதொழு கின்றநதி*குன்றுவளர்
திருமணக்கணநாதனே. (1)

மங்கையுன்மயுதீரசேர் கந்தனைத்தீர்த்தவா
வாரணமுக்கணேயா
மதுரமுக்கனியோடு சற்கரையுமோதகம்
மண்டபபுகட்டுவாயா
சங்கையில்லாதுமாங் கனிபெறச்சங்கரன்
றனைவலம்வருமுபாயா
சண்முகன்வள்ளியைச் சாருமாகானிடைத்
தந்தியாய்வந்தநேயா
தங்கமாநின்னடியை நெஞ்சிற்புகுத்துமொரு
தாசருக்கருள்சகாயா
சஞ்சலப்படுகுழியில் வீழாமலெற்கினித்
தண்ணருளளித்திடாயா
திங்கணேர்முகவாணி யொடுநான்முகத்தனுந்
தேவரும்மவர்நாதனுஞ்
சென்றுதிருநின்றுதொழு கின்றநதிகுன்றுவளர்
திருமணக்கணநாதனே. (2)

அரியரப்பிரமாதி யாவர்க்குமுதலான
வானைமாமுகதேவனே
யம்பிகாதனயனே கும்பகம்பீரனே
யழகுவல்லபைநேயனே
புரமெரித்தோனிரத முறியச்செய்தனந்தபரி
பூரணப்பொருளேசுவைப்
புத்தமுதவாரியே நத்துமடியாருளப்
பூந்தவிசிருந்துளானே
விரிவேதவாகமக் குடிலையின்பொருளாய்
விளங்கும்விநாயகதினம்
விரிவாகுமஞ்ஞான வேலையிற்கரையேற்றி
மெய்ஞ்ஞானவீடருளுவாய்

---

* ஈண்டுச்சந்தவின்பநோக்கி இயல்பாயிற்று. இனி வருமிடந்தோறு மிங்ஙனமே கொள்க.

தெரிசனங்காணவே பரிவர்யனுரதந்
தேவேந்திராதிமுனிவோர்
சென்றுதிருநின்றுதொழு கின்றநதிகுன்றுவளர்
திருமணக்கணநாதனே. (3)

அரிதானமூலமுத லன்பத்தொராக்கரம
தாகியீண்டொளிர்தெய்வமே
அருளானநான்மறைப் பொருளாகியாவுமா
யல்லவாகியசொருபமே
புருகூதனெந்தைக்குகந்தருள்புரிகெனப்
பூசிக்கநேர்வந்தவன்
போக்கருந் துன்பங்க ணீக்கிக்கடாக்ஷித்த
பொருவருங்கருணைசரா
தருஞானகற்பகக் களிறேமொம்பவஞ்
சாராதிருக்கவுனையே
தஞ்சமாப்போற்றினே னஞ்சலென்றபயந்
தனைத்தந்தடிக்கணுவைப்பாய்
திரமீதெனப்புவியி லுறைவார்தினந்தினம்
ஜெயவிஜயவென்றுபோற்றிச்
சென்றுதிருநின்றுதொழு கின்றநதிகுன்றுவளர்
திருமணக்கணநாதனே. (4)

கயமுனவமுதமுங் கைப்பற்றிச்சகிமேவு
நாமமாயிரமுள்ளவா
நற்கந்தர்முன்வந்த வர்மும்மதங்குலவு
நால்வாயுருக்கொண்டவா
கயமுகாசுரனையொரு கோட்டாறடிந்தவா
கரணமொன்றுகிநாளுங்
கருதுமடியார்க்கினிய பொருளாகிமுன்வந்து
காத்தலேதொழிலானவா
ஒயிலாகமூடிகந் தனிலேறுமெந்தையே
யொளிசுடற்புவிமீதிலே
யுனையன்றிகதிவே றெனக்கியாராகலா
னுன்னடிக்கடிமையாக்காய்
செயலெனச்சூழ்ந்துவரு மயலேதொலைத்தருள்
செய்கெனுவெத்தகையரும்
சென்றுதிருநின்றுதொழு கின்றநதிகுன்றுவளர்
திருமணக்கணநாதனே. (5)

திருமணக்கணநாதர் பஞ்சரத்தினம்

முற்றிற்று.

ஸ்ரீ தண்டபாணிசுவாமி துணை.



திருநதிக்குன்றத்தின்கண் ணெழுந்தருளியிருக்கும்

ஸ்ரீ தண்டபாணிசுவாமிகள் பதிகம்.

காப்பு வெண்பா.

கங்கைநிகர்சுனையுங் காவினமும்வானிலவு
துங்கநதிக்குன்றூர் சோதிமய—னங்கோனாந்
தண்டபாணிப்பதிகஞ் சாற்றத்திருமணப்பேர்
கொண்டிலகுமைங்கரனைக் கூறு.

நூல்.

ஆசிரிய விருத்தம்.

கங்கைசூழும்புவியி னெங்கும்ப்ரகாசமாக்
கண்கண்டதெய்வமாகிக்
கருதுமடியார்கடம் மிருவினையகற்றியே
காத்தருள்கனிதாருவே
மங்குல்சூழும்பொதிய மாமலையிருந்துமுன்
வண்டமிழ்விரித்தமேலோன்
மனவிருளகற்றசற் குருவென்னவந்தநன்
மாசின்மணித்தீபமே
சங்குசக்கரகட்க கதையோடுகோதண்ட
தரநாரணன்மருகனே
தாரணியிலுனதுதிரு வடியினைப்போற்றினேன்
சஞ்சலந்தீர்க்கவருவாய்

தங்கிவளருங்கோங்கு சண்பகம்முதலாய
தண்ணம்மதுப்பிலிற்றுந்
தண்டலைச்*சூழ்ந்திக் குன்றமீதோங்கிவாழ்
தண்டபாணிக்கடவுளே. (1)

உலகெலாம்விலைபெறுக் குழையிரண்டொளிசெய்யு
மொண்செவிமுகத்தினழகு
முயர்வாசமலர்மாலை பாமாலைபுரளநீ
ளாற்றினிடையர்களழகுந்
தலமதனினிலை[illegible]ரமொன்று
தாங்குநேரிடையினழகுந்
தளர்வுறு தொருகரந் திறமுளத்தண்டமே
தாவியூன்றிட்டவழகும்
மலியருட்பதமுன்பின் மறைமுடிப்பாதுகையின்
மன்னிநிற்கின்றவழகும்
வரையிலாப்பிறவெழிலு மிருகணுரைக்கண்டு
வந்திக்கவரமருளுவாய்
சலவளங்குலவுமஞ்சன யாற்றினொடுமணச்
சந்தனத்தருவேமுதற்
றண்டலைச்சூழ்ந்திக் குன்றமீதோங்கிவாழ்
தண்டபாணிக்கடவுளே. (2)

செந்தின்மாநகரினோ டாவினன்குடியினுந்
திருவேரகந்தன்னினுந்
திருவார்பரங்கிரியி னுஞ்சோலைமலையினுந்
திகழ்குன்றுதோறாடலும்
வந்துளோயிந்தப்ர தான்தலமல்லாது
வடவேங்கடந்தணிகையே
வான்கச்சியருணையா னைக்காவெழிற்றில்லை
மன்னுகாளத்திபிறவுஞ்
சிந்தையாரருளினோ டுற்றலகினோர்க்கெலாஞ்
சேவைதந்தாளுமணியே
செய்யதமிழுக்கிரங் கையனேயறுமுகச்
செம்மலேதெள்ளமுதமே
சந்ததமுமென்னுளத் தெய்தியகடம்பனே
சங்கரர்க்குபதேசனே
தண்டலைச்சூழ்ந்திக் குன்றமீதோங்கிவாழ்
தண்டபாணிக்கடவுளே. (3)

---

* ஈண்டுச்சந்தவின்பநோக்கி ஒற்றுமிக்கதென்க. இனி வருமிடந் தோறுமிங்ஙனமே கொள்க. சில வடமொழிச்சந்தியிலுஞ் சந்தநோக்கி மிக்குவந்துளவென்க.

சாத்திரப்பார்வையுங் கேள்வியும்பெற்றிலேன்
 சாதுசங்கஞ்செய்திலேன்
சைவ்நெறிமுறையின்ன தென்றறிகிலேன்மனச்
 சலனந்தனைத்தவிர்கிலேன்
பாத்திரமறிந்துநல் லையமிட்டுண்கிலேன்
 பரமசந்நிதிகாடியே
பாடித்துதிக்ககில் லேன்றுதிப்பார்கடம்
 பாதந்தனைபபணிகிலேன்
வேத்திரம்போல்விழித் தித்திரட்பாவைமார்
 வீசுவலையாலுழன்றே
வேதனையுள்ளாகியா னெனதெனுமகங்கார
 வேட்கைகய்யப்பெற்றேனலால்
சாத்தியம்தீர்யுனைச் சாருதலிலாவெனைத்
 தண்ணருள்கொடுத்தாள்வையோ
தண்டலைச்சூழ்நதிக் குன்றமீதோங்கிவாழ்
 தண்டபாணிக்கடவுளே. (4)

கந்தந்தவாமலர்க் கண்ணிவானவரோடு
 கலைவேதவியாதமுனியுங்
கனவத்ரிபிருகுநற் கௌதமர்கோசிகர்
 காசிபர்தூருவாசர்
சுந்தரவசிட்டர்சம தங்கிபாரத்வாசர்
 சொலுமற்றையோர்களெல்லாஞ்
சூழவூர்வசியாதி யோரலங்காரமாச்
 சுகபரதநட்டமாடத்
தந்திசேர்வீணைதும் புருநாரதப்புனிதர்
 சாமகானம்பாடிடச்
சந்தமார்தெய்வதப் பிடியோடுவிண்ணகந்
 தன்னிற்பராஅயதகையோய்
தந்தைதாய்தமர்குருவு நீயாகையாலைய
 தமியேனையாளவருவாய்
தண்டலைச்சூழ்நதிக் குன்றமீதோங்கிவாழ்
 தண்டபாணிக்கடவுளே. (5)

அண்டமோராயிரத் தெட்டெட்டுங்கட்டியர
 சாண்டமாசூரபன்ம
னரிமுகன்குருகா சுரனாதியோரான
 வசுரப்ரதாபருடலை
மண்டியிருகூறுறத் தண்டாதவேலினல்
 வாட்டிப்பிளந்துவனமார்
வானவர்பிரான்றனக் கரசளித்தோய்மெய்ம்மை
 மாதவர்தினந்துதிப்போய்
தொண்டனேற்குன்பதங் கண்டுசெவித்திடத்
 தோன்றாததென்னைகொல்லோ
சோதியாதினியேனுஞ் சும்மாவிருந்திடச்
 சொல்லொன்றெனக்கருளுவாய்

தண்டுலாவும்போது மண்டுநீள்சுனையோடு
சண்பகாசோகுமுதலாந்
தண்டலைச்சூழ்நதிக் குன்றமீதோங்கிவாழ்
தண்டபாணிக்கடவுளே.

குரவ்வாசக்கோதை குலவுஞ்சுசக்கிளவி
கோபவாள்விழிமின்கவண்
குலவம்புயக்கரங் கொண்டேதினைப்புனங்
கொள்ளைகொள்ளத்திரளொடும்
வருபுட்குலந்தனை வெருட்டிமன்னுறவவண்
வாகுசேர்முதுவடிவமாய்
வந்தருகிருந்தின்மொழித் தேனளித்தந்த
மாதும்தன்மதுவாய்ந்தமா
தருசவுந்தின்றுநீர் பருகுவானீகெனத்
தடமடப்புகலைவற்றவன்
றந்தியைக்கண்டபய மென்னலுங்காத்துளந்
தழுவுசண்முகநாதனே
சரணபங்கயமருளி யிருவினையகற்றியே
தமியேனையாளவென்றே
தண்டலைச்சூழ்நதிக் குன்றமீதோங்கிவாழ்
தண்டபாணிக்கடவுளே. (7)

திங்களுங்கொன்றையுங் கங்கையுஞ்சோசடைச்
சிவனுரளித்தமுருகா
தெசமுகன்முடியையமன் மிசைவிழக்கணைவிடுஞ்
செயராமனுக்குமருகா
ஐங்கரக்கணராச குஞ்சரச்சோதரா
ஆறுமாமுகமானவா
வடியனேனிருவினைக் கொடியபாசத்திடை
யழிந்துறாதினியாளவே
செங்கைவேல்வல்லவிரு பங்கினுங்குறமாது
தெய்வதப்பிடியாளுடன்
சித்திரத்தோகைமே லெத்திசையரும்போற்ற
சேவைதந்தாளவருவாய்
சங்கரனுவக்குமலை மங்கையுமைமைந்தனே
சரவணேற்பவநாதனே
தண்டலைச்சூழ்நதிக் குன்றமீதோங்கிவாழ்
தண்டபாணிக்கடவுளே (8)

கல்லாதமூர்க்கரையு மீகையில்லதுபொன்
காத்திடும்பேயர்தமையுங்
கருதியவர்சொல்லுக் கிணங்கியுண்டிக்கெனு
காலங்கழிக்குமதவு
மல்லாமலுங்கொடிய வாசைக்கடற்குளே
யகமானதைத்தொலைத்தே
யரிவையர்கடம்மைப் புணர்ந்துசிற்றின்பத்தி
லாழ்ந்துகெட்டேயலையுமென்

பொல்லாப்பவப்பாச மேதொலைத்தெனறுகின
   பொன்னடிக்காளாக்கலோ
புந்[illegible]ந்தெண்ணுவார்க் கின்னருள்சுரந்துநற்
   போதமேதந்தாளுவோய்
சல்லாபமாய்வள்ளி தெய்வதப்பிடியோடு
   சரசசண்முகநாதனே
தண்டலைச்சூழ்ந்திக் குன்றமீதோங்கிவாழ்
   தண்டபாணிக்கடவுளே. (9)

ஓராறுமுகமாட வீராறுகரமாட
   வோங்குவடிவேலுமாட
வோதுமணிவடமாட வொண்குழையசைந்தாட
   வுற்றதிண்டோள்களாட
வாரா[illegible]மலர்த் தாராடவிருபுறம்
   வள்ளிகுஞ்சரியுமாட
மயிலாட[illegible]டியாடநின்றொடு
   மருவுநவவீரராட
நேரார்வெருவவாகன் [illegible]
   நெஞ்சசந்தனிலாடுவோய்
நிகரிலாக்கும்பமுனி நீளிருளகற்றியரு
   ணித்தனே வினைகளென்னைச்
சாராதறக்கடைக் கண்ணினோக்கிடச்
   சண்முகாவிதுசமயமே
தண்டலைச்சூழ்ந்திக் குன்றமீதோங்கிவாழ்
   தண்டபாணிக்கடவுளே. (10)

அருணகிரிநாதருங் கீரருமகத்தியரு
   மானமுனிவரருமேனு
ளன்புகொண்டானந்த மாகிநற்றமிழினு
   லாயபாமாலைசூடிப்
பெருமையும்மோட்சகை வல்லியும்பெற்றதாப்
   பேசுவார்வல்லோரதைப்
பேதையுமுணர்ந்துநின் பாதமேகதியெனப்
   பேராசையாலுரைத்தே
னரிபுத்திரன்றமிழ்ப் பாக்களைவெறுமலை
   யையநற்செவியிலேற்றே
யருளுறுங்குருவடிவ மாகிவந்தாட்கொள்ளு
   மப்பனேசுப்ரமணியே
தருவசோகஞ்சூத மாவால்கடம்புவான்
   சண்பகமுதற்பராவுந்
தண்டலைச்சூழ்ந்திக் குன்றமீதோங்கிவாழ்
   தண்டபாணிக்கடவுளே (11)

முற்றிற்று.

சூர்ணிகை.

ஓம் கங்காம்புலிஜடாமகுட குண்டலித்ர த்ரிநேத்ரகாளகண்ட த்ரிசூல கபால [illegible] புராந்தக நாகபூஷண வில்வார்ச்சித பஞ்சாக்ஷர [illegible] கிரீசபரமேசசர் வேச வுமாமஹேசபரசிவகுமாரா.

அண்டாண்ட ப்ரம்மாண்ட [illegible] புவனரக்ஷகசப்த கோடிமஹாமந்த்ரைகாக்ஷரத்ரிநேத்ர சிவகாமசுந்தரீ [illegible] வரபுத்ரி மரகதவடிவாம்பிகா பரமேஸ்வரி பார்வதிதனயா.

ப்ரணவஸ்வரூப கஜாநநசிவர்ன சோடசநாமதேய த்ரிலோசன த்ரிமூர்த்யாதி சுரேந்த்ரவந்தித பாசாங்குசதஹரகாக்ஷர த்ரியாட்சர பஞ்சாக்ஷர ஷடாக்ஷராஷ்டாக்ஷர மூலாதாரஸ்வாவர்ஷடவசீகர கற்பகாமதேயோமாம்மஹேசபுத்ர கஜமூகாசுரசம்ஹார சித்திபுத்திவல்லபாசரிய திருமணசித்திவிநாயகசோதரா.

முரஹரிமுகுந்தமாதவகேசவ நீலமேகஸ்யாமளாகார தசாவதார துஷ்டநிக்ரஹசிஷ்டபரிபாலனக்ருபாகர துளபமாலிகாலங்க்ருத சர்வஜீவரக்ஷகாஷ்டாக்ஷர தாரகநாமக்ஷீராப்திசேஷசயன சங்கசக்ரகதாகட்க கோதண்டதராஷ்டலக்ஷ்மீசமேத ஸ்ரீவேணுகோபாலன் மருகா.

அரிசந்தனசந்தானமந்தாரபாரிஜாத கற்பகவா[illegible]யிராவதாரோஹணசசிமஹேந்த்ர வஜ்ரபாணிவரபுத்ரி [illegible] குணலக்ஷணதேவகுஞ்சரிசமேதேந்துவதன கானகுறவஞ்சிவரா.

கிரவுஞ்சதாருக சூராதிசூரசத்ருசம்ஹார கோடிசூர்யப்பிரகாச ப்ரஜ்ண்ட சத்திவேலாயுதகரா.

அஷ்டகுலாசல சப்தசாகர பூமண்டலாதிகிடுகிடென டபடபடாஹார வாயுவேகவீரப்ரதாப பஞ்சலக்ஷண விசித்ர சவ்பமயில்வாகனு.

வீரதீர நவவீரபூதலக்ஷகண கின்னரகிம்புருட கருடகாந்தர்வ சித்த வித்யாதர சுரேந்த்ரமுனீந்த்ர அஷ்டக்மதிக்பாதல சர்வலோகசேவித பதாம்புயா.

அநேகாதித்யப்ரகாச நவமணிக்ரீடஷடாநநத்வாதச விலோசனபுயாசல மகரகுண்டல ஹாரகேயூர கடகங்கணருத்ராக்க கடப்பமாலிகாதர பரப்ரம்ஹாநந்த சதுர்வேதோத்தாரின பண்டிதகிந்திகடம்ப காங்கேயாதி சகஸ்த்ரநாமதேய சச்சிதானந்தஷட்கோண ஷடாக்ஷரப்ரபோ.

பூமண்டலதிலக துண்டீரமண்டலசோணசைலோத்ர பாகுகமண்டல மத்ய ஸ்ரீதிரவிடவேதமுனிபுங்சவ் பூஜாமஞ்சன்சஇக்குன்றவாசசகலபாபவிமோசன [illegible] வாரணைஷத திருமிளகோதன்ப்ரசாதசிருஷ்டீர ஓம் சரவணபவாகர்த்த தண்டபாணீஸ்வரூப பராக்கு. பாரிக்கு.

அ

சிவமயம்.

திருநதிக்குன்றத்தின்கண் ணெழுந்தருளியிருக்கும்

ஸ்ரீபாலசுப்பிரமணியர் லாலி.

1 திருவாவினன்குடியில் சேர்ந்தருளும் புனிதா
திருப்பரங்குன்றுதிருச் சீரலைவாய் நாதா
திருவேரகஞ்சோலை கிரிப்ராக் யாதா
திருநதிக்குன்றில்வளர் சிவஞான தாதா (லாலி)

2 ஆகமபுராணமறை யோதி துதி தீரா
அகத்தியமுனிக்கருளளித்தவுப காரா
தோகைமயிலூர்ந்துலவு சுந்தரவொய் யாரா
சுகஞானமெய்தவொரு சொல்லருளு தாரா (லாலி)

3 பொங்கரவுபுனையுமரன் புகழ்தரு குணாளா
பூவைமரகதவல்லி போற்றவளர் தோளா
பங்கயனுமேனையரும் பரவுமிரு தாளா
பாலசுப்பிரமணிய பட்சமுடை ளாய் (லாலி)

4 ஆர்த்துவருசூரர்குல மழிவுபெறத் தானே
ஆறுமுகமும்பன்னிருகை யாகவந் தேனே
பார்த்துவருமந்தக பயந்தவிர நானே
பாடினனிதைக்கோடி பரமசுக வானே (லாலி)

5 கன்னிகுறவள்ளிதனக் காகவன மேகிக்
கனியிதழுமுத்தநகை கண்டுமய லாகிக்
கன்னலமுதென்னக் கலந்துமகிழ் போகி
கருதுமடியார்க்கினிய காட்சிதரு தியாகி (லாலி)

6 மஞ்சுதவழுந்தணிகை மலையிலுறைளிர் சீலா
மதிவதனயானையெனு மாதுபுணர் மேலா
அஞ்சுதலிலாக்கொடிய வவுணர்குல காலா
அரகரவெனத்துதிசெ யடியரனு கூலா (லாலி)

7 மகபதிதன்திருமருக மாசறுசண் முகனே
மதிமிகுமெண்குணநிதியே மாமறையு ளானே
இகபரமிரண்டெவு மெந்தைபெரு மானே
யிருவினையெனிருளகல வின்றுதவு கோனே (லாலி)

8 தூயவருணாசலன் றுதிக்கவரு — நீதா
தும்பிமுகனுக்கிளைய சுந்தரவி — னோதா
சேயனுனைநீடுதுதி செய்துமினம் — வாதா
ஓயனெனினுங்கருணை செய்திடவொ — ணாதா (லாலி)

9 அய்யனைக்கிரௌஞ்சத்தின் மிசையுக்கையாற் — குட்டி
அரியசிறையிட்டுவோரயண்டமிசை — மூட்டி
வயமிலகசின்றதகர் வாகனகை — கொட்டி
வலியநமன்வாராத வணமருள்செய் — செட்டி (லாலி)

10 வாழிசரவணபவனும் மான்மருக — வாழி
வனிதையிருவோருமொளிர் வாகையயில் — வாழி
வாழியநெடுந்துவச மாமயிலும் — வாழி
வளமைதருதிக்குன்ற மாநகரும் — வாழி (லாலி)

வேறு லாலி.

திருமாலின்மருகலாலி — வள்ளியொடு
தெய்வானைலோலலாலி
அரனாரியமைந்தலாலி — குமரகுரு
வாறுமுகதேவலாலி 1

ஆராலுமறியயொணாத — பரனுதவ
ஆதிசரவணவியில்
சிராகவேலனாந்த — மிருபால
சிவசுப்பிரமணியலாலி 2

நவமாதளித்தபாலர் — நவவீரர்
சுற்றுணைவராகலட்ச
சிவபூதகணநாதரைப் — படைகொண்ட
செல்வமுருகேசலாலி 3

ஆயிரத்தெட்டண்டமுங் — கட்டியர
சாண்டமாசூரபன்மன்
காயமதிரவெருவவே — வேலெருட்ட
காளைசண்முகவலாலி 4

தேவர்சிறைமீட்கவெண்ணிச் — செந்தினகர்
சேர்ந்தேமகூடமெய்தி
மேவலரைமுன்கடிந்த — வடிவழகு
மேவுசேவகனேலாலி 5

ஜெகமாதியாவுமீன்ற பராசத்தி
செய்யசிவகாமிமாது
மகனாகிவந்துதித்த சிவஞான
மாசிலாமணியேலாலி 6

குருமுனிக்குபதேசமே செய்யச்ந்
குருவடிவமாகிவந்து
திருநதிக்கிரிபதிலே வளர்கின்ற
சிவசுப்பிரமணியேலாலி 7

அருணகிரிநாதனுக்கு மெய்ஞ்ஞான
அன்பனக்கீரனுக்கும்
தருணமதையோர்ந்துகாக்க வந்தருள்செய்
திறப்பிரகுமாரலாலி 8

திருப்பரங்குன்றேரகம் பழனிமலை
திருச்செந்தினகர்சோலையும்
திருத்தணிக்குன்றேமுதல் பதிகவாழும்
சிவசம்புசேயலாலி 9

அருணசலன்றன்னையுங் கற்றபடி
யானபாமாலைசொன்ன
அரிபுத்திரனையாளவே காலமிது
ஆறுமுகதேவலாலி 10

முற்றிற்று.

சுவ்வி.

1. சுவ்விமான்மகள்சமேதா சுவ்விபொற்சதங்கைபாதா
சுவ்விசுந்தரவினோதா சுகுணசுவ்வி (சுவ்வி)
2. தேவயானைதன்மணாளா தேவரெவரும்போற்றுதாள
ஆவலாயிராறுதோள அமலதேவனே (சுவ்வி)
3. பரமனுதற்கட்பொறியதாகிச் சரவணப்பொய்கையினிலேவி
வருமுருகவரிமருக வருகவருகவே (சுவ்வி)
4. கார்த்திகைபாலைஇயருந்தித் தோத்திரஞ்செய்தார்க்கருள்செய்
கார்த்திகேயகீர்த்தி மேவுகருணைவண்ணனே (சுவ்வி)
5. மாறிமாறிச்சூரரைவென்ற கோரதீரவவுணருக்குச்
சூரகாலவேலனெனவே சொல்லியேகிதம் (சுவ்வி)

6. அன்னமன்னநடையழகி கன்னிவள்ளிதன்னைத்தேடு
பன்னிருகண்ணம்புய பரம்பரனேயோ (சுவ்வி)
7 பண்டுவினையிறகொண்டவிருளை அண்டிடாமனின்றுதொழுதரு
தொண்டருக்கருள்செய்குகனே தூயசோதியே (சுவ்வி)
8 சோபமாயவிருளைநீக்கித் தீபமென்னத்தேருமவர்க்குப்
பாபரகிதபரமகுருவே பாடிற்றேமிதோ (சுவ்வி)
9. குறுமுனிக்குகந்துபண்டுவருள் செய்தண்டபாணியென்னத்
திருநதிக்கிரியில்வாழுந் தேவதேவற்கே (சுவ்வி)
10 வாழிமறைகண்மறையோராவாழி [illegible]வாழி
வாழிமுருகனடிகளன்பர் வாழிவாழியே (சுவ்வி)

சுவ்வி [illegible]று.

சுப்பிரமணியர் ஊசல்.

திருமருவுமரகதத்தாறகால்களுட்டிச்
செம்பவளக்கொடுங்கையொடுதிகிரிசேர்த்து
வரிமருவுவயிரத்தால்விட்டம்பூட்டி
வாகுவைடூரியத்தாற்பலகையிட்டு
விரிதரளமணிகளைச்சங்கிலியிற்கோத்து
விளங்குநவமணிகுயின்றபீடமீதே
பரவுதிருநதிக்குன்றிலாடிருசல்
பாலசுப்ரமாமணியேயாடிருசல. 1

வீரசம்பீச்சுரனும்விருப்பங்காட்ட
விளங்குமரசதவல்லியமுதமூட்ட
தீரநெடுமான்முதலோர்வாழ்த்துக்கொட்டத்
திருமகளுங்கலைமகளுந்தீபங்காட்டக்
கூருமதிநறுஞ்சுண்ணங்கொண்டுகூட்டக்
குபேரனணிமணிமாலைதுலங்கச்சூட்டப்
பாருபுகழுநதிக்குன்றிலாடிருசல்
பாலசுப்ரமாமணியேயாடிருசல் 2

பூமனிந்திரனும்வெள்ளியோராப்புக்கேவப்
புரமெரித்தபுண்ணியனேபெற்றருளொண்ணைத்
தாமதசூர்ப்பகையாலே[illegible]ன்றேமாழ்
தயைபுரியெனறேதுமொழி[illegible]ற்று.

மாமதியஞ்சூடுமரன்மனமுனிந்து
வுனனிப்புலிங்கம்விழிவழிவிடுப்ப
மாமணிப்பொய்கையில்வளர்ந்தீராடிரூசல்
வாலசுப்ரமாமணியேயாடிரூசல். 3

மண்டலமாமலைத்தினையுமகிழ்வாயீன்ற
மாதுமைதந்திடுமமுதம்வாய்[illegible]த்துண்டு
அண்டரெலாந்[illegible]விளையாடல்பூண்டு
அகமகிழ்வாய்க்கர்தமலையமர்ந்துபோற்று
முண்டகனைக்குடிலையதின்பொருள்சொலென்று
முனிந்தவனைச்சிறைப்படுத்துமுதல்வமேலோர
பண்டுதொழுநதிக்குன்றீராடிரூசல்
பாலசுப்ரமாமணியேயாடிரூசல். 4

மதிநதியஞ்சூடுமரன்மகிழ்வினீந்த
மாமணித்தேரூர்ந்துமிக்கவானோர்சூழப்
பதினொருருத்திரர்களைக்கைப்படையாச்சொண்டு
பராக்கிரமநவவீரர்துணைவரோடு
விதிதவராப்பூதவட்சவீரர்போற்ற
விளங்குதிருச்செந்தூரின்மேவியந்தப்
பதியிருந்தநதிக்குன்றீராடிரூசல்
பாலசுப்ரமாமணியேயாடிரூசல் 5

தேவரிடரைத்தவிர்க்குஞ்சிந்தையாகிச்
செந்திநகர்கடந்தேமகூடமேகி
மேவலரைக்காய்ந்துகரங்கொண்டுவிட்ட
வேற்படையாலிருகூறாய்வீழ்ந்தசூரன்.
சேவலுமயூரமதாச்சிறக்கவாண்ட
தேவசேனாபதியேதிசையுளோரும்
பாவனைசெய்நதிக்குன்றீராடிரூசல்
பாலசுப்ரமாமணியேயாடிரூசல். 6

மதிவதனவள்ளிதெய்வயானையென்பார்
மருவியிருபுறமன்னமணந்துகாத்துத்
துதிமிகுநற்றணிகைமுதற்றலங்களெங்குந்
தொழுதிடுவார்க்கருள்சுரக்குஞ்சோதிமூர்த்தி
பொதிகைவளரகத்தியராம்புனிதனார்க்குப்
போதமருள்செய்யுமாறுமுகமோடெய்த
பதிமிகுமாநதிக்குன்றீராடிரூசல்
பாலசுப்ரமாமணியேயாடிரூசல். 7

வண்டாடுதொங்கலணிவள்ளியாரும்
வானவர்கோன்றந்தமடப்பிடியன்றாரும்
தொண்டாருமன்பர்களுந்தொழுதுபோற்றத்
தூயவமுதப்பிழம்பின்றோற்றம்போலக்
கொண்டாடுமாமறையுங்குலவவோங்கும்
குருபரனேசரவணனேகோதொன்றின்றிப்
பண்டாடுகதிக்குன்றீராடிரூசல்
பாலசுப்ரமாமணியேயாடிரூசல். 8

வானவர்கள்மலர்மாரிசொரிந்துதேட
கள்ளிதெய்வயானை புள[illegible]
ஞானமிகுதும்புருநாரதரும்பாட
நல்லியலாரரம்பையர்கணடனமாட
மானிலமெய்ஞ்ஞானியர்கண்மகிழ்ந்துநாட
மைந்தனரிபுத்திரனபாமாலைசூட
வானளவுநதிக்குன்றீராடிரூசல்
வாலசுப்ரமாமணியேயாடிரூசல். 9

எத்திசையும்புகழ்சீரனமுறையதேறறே
யிகலவுணன்மடியவயிலேவுதீரா
பததிசெயுமடியவாகளுப்பவஙகள்சாராப்
பதமளிததுக்கடைக்கணிக்கும்பகருதாரா
அததுவிதவததுவிலையருளவாரா
யமலமறைப்பொருளானவையவேலை
மத்துநிகர்நதிக்குனறீராடிரூசல
வாலசுப்ரமாமணியேயாடிரூசல. 10

ஊசல் முற்றிற்று

எச்சரிக்கை.

மதிசூடுசெஞ்சடையானருண் மதலாயநிலஞ்சேர்
நதியாசலமுறைசோதியே நாதாவெச்சரிக்கை 1
அரஞர்வீரஜம்பீசுர ரளித்தஞானவமுதே
சரவணப்பொய்கையிலேவளர் தருவேவெசசரிக்கை 2

உரகந்தலைச்சுமையா[illegible] வுலகந்தனையுதவு
மரகதப[illegible]ளியாற்றின் மிகவேலெச்சரிக்கை 3
அம்போருகமலரோ[illegible] களிசெய்தருள[illegible]
கும்பமுனிக்கருள்செய்திடுவன் குருவேயெச்சரிக்கை 4
மகவானளித்ததரு[illegible]
சுகமாகக்குறவள்ளி[illegible]யெச்சரிக்கை 5
வடிவேலெடுத்தசுரர்களை [illegible]
படியோர்மிகத்துதிசெய்[illegible]யெச்சரிக்கை 6
நக்கீரனுடைருண்கிரி நாதன் தமிழ்மாலை
பொற்பூவெனப்புகழ்ந்தேயணி புனிதாவெச்சரிக்கை 7
மேவலர்கண்மீதுவடி வேலேவியவிமலா
[illegible]நடக்கவிந்த நாரெயெச்சரிக்கை 8
அடியார்களுக்கனு[illegible]
படிசெய்சினகரத்தோங்குதற் பரனேயெச்சரிக்கை 9
ஞானத்தினிலரிபுத்திர னை[illegible]
கோலச்செவிகொடுப்பாய[illegible]யெச்சரிக்கை 10

எச்சரிக்கை முற்றிற்று.

கும்மி

கும்மியடிப்பெண்காள் கும்மியடி குருநாதன் [illegible]கும்மியடி
நம்மையாளுஞ்சண்முகன்பாதத்தினை [illegible] கும்மியடியுங்கடி 1
கங்கையணிந்தசிவபெருமானருள் கந்தவேள் கும்மிதனைப்பாடத்
திங்களணிந்ததிருமணப்பிள்ளையின் செய்வச்சமலப்பதங்காப்பே 2
முத்துக்குமாரனைப்பத்தியோடுகூடி முப்பொழுதுங்கும்மிபாடுதற்குச்
சத்திசிவன்றிருமாலொடு நான்முகன் [illegible]சரஸ்வதிகாப்பாமே 3
நாதனேவேன்முருகையாவென்றுநீத நாடியவன்றுதிபாடினரன்ன
மாதவமோங்கிடச்சாதனையுங்கூடி மன்னியமோக்ஷமுங்கிட்டுமடி 4
இன்னயப்பெண்களாயீசனமுத்துக்குமரேசன் திருவடிதன்னைநித
நன்னயமாகப்பணிதலினால் [illegible]கொண்டடியுங்கடி 5
சொங்கைகுலுங்கவளைகளொலிசெயக் கோலமாமேனியொளியுதவச
சங்கையில்லாமலேசண்முகனைப்பாடிச் சேர்ந்து கும்மியடியுங்கடி 6
இந்தத்திருத்திகருன்றுறைசண்முகனெம்மேருய்யக்கருணையுடன்
வந்தவரலாறுதன்னைவகுத்துவன் வாழ்த்திக்கும்மியடியுங்கடி 7

இந்திரன் வானவரும்மயங்குமியாரு மேகியேவெள்ளிமலைவாழும்
அந்திவண்ணன் றனைவந்தித்தசுரரா லானகொடுமைகளைககூறி [டவே
வனமனத்தானவர் தம்மை[illegible]லைத்தருள் வாயெனப்பன்முறைவேண்டி
[illegible]னெற்றிவிழி[illegible] 9

சித்தியவா[illegible]திியில்விடப்
புந்திசெங்கலைபொரு[illegible]காண் 10

சேர்த்தபொறிகளோராறுமாறுசெய்ய செம்பொற்குழவிகளாயுதிப்பக்
கார்த்திகைமாதரமுதூட்டியோம்பக் கத்தனுமாறுமுகமானை 11

சண்முகதேவனுமொன்பதுவீரரைத் தம்பியராகவேகொண்டிலக்கம்
திண்புயப்பூதகணங்களைத்தன்னொடு சேனையதாக்கொண்டெழுந்தாண்டி

போருக்கென்றேகியவாறுமுகனுறனைப் புந்தவகாரதருந்தொழுது
தாருகாசூரனைமுனபலியாகவே சத்திவேலேவெனவுரைத்தாராம 13

நாரதரோதக்ரவுஞ்சமுந்தாருக னுசமதாகவேவேல்விடுத்துத்
திரனுஞ்சூரன்கிளையுடனேவிழத் தெயவீகவேலைவிடுத்தாண்டி 14

சூரனகரந்தருமாறிவாவந்த தோகைமயிலைத்தளவாகனமா
யேறிதேவாசிறைமீட்டருளற்புத மெனறுமிசைத்தேயடியுங்கடி 15

தேவர்பிரான்மகள்குஞ்சரியைமணஞ் செயதுதிருவருள்செயதபினர்
ஆவலுடனகுறவஞ்சியைக்கூடியே யன்பாய்த்தணிகையமர்ந்தாண்டி 16

அம்புவியோர்களுமும்பரும்போற்ற வகத்தியமாமுனிக்காகவிர்தச்
செம்பொற்றிருநதிக்குன்றமீதிலருள் செயயவமர்ந்தானும்பாருங்கடி 17

பாராதியோரிந்தத்தண்டபாணிதனைப் பத்தியாய்சித்தந்துதிப்பாரேல்
தீராப்பிணிகளுமாறுதனைபமுந் தீருமென்றேமறையோதுமடி 18

மனனுரைத்தமொழிப்படியேஞான முத்தியளிதகிசெண்முகனார்
மனனுதிருவடிதன்னையனுதினம வாழ்ததிக்கும்மியடியுங்கடி 19

புலவறிவாலரிபுத்திரன்சண்முகர் பொன்னடிக்குப்புகல்கும்மித்தமிழ்ச்
சாலவிற்பிழையிருந்தாலுமபொறுத்திடத் தூயபுலவரைக்கோருங்கடி 20

குும்மி முற்றிற்று.

சிவமயம்.

சிவசுப்பிரமணியர் கீர்த்தனாஷ்டகம்.

காப்பு வெண்பா.

ஆதாரத்தோங்கு மமலமணப்பிள்ளை
பாதாரவிந்தம் பரவுதுமால்—வேதா
முதற்குந்திக்குன்றத் தூயசுப்பிரமணிய
கீர்த்தனம்பாடற் கின்று.

விநாயகர்பேரில், கீர்த்தனம் இராகம் - நாட்டை - ஆதிதாளம்.

பல்லவி.

கணநாதா சரணம் காத்தருள் கணநாதா சரணம்.

அநுபல்லவி.

மணிவண்ணனுமயனு மகபதியுஞ் சதுர்
மறையுந்துதிக்கும் விறையவவித்தக (கணநாதா)

சரணங்கள்.

கும்பகம்பீரவீரா தோளுதவலுலவுமாரா
நம்பினவர்க்காதாரா நாகபூஷணதீரா
நதிமதியம்முடி யதனில்விளங்குறு
பொதுவினடத்தவ னுதவுகளங்கறு (கணநாதா)

அத்திமுகப்ரகாசா ஐங்கரனேபொற்பாதா
துத்திப்பாம்பணிபோதா தொண்டனென்மிசைவாதா
சுத்தசிராகர சுகுணமூலாதர
பத்தர்பராவும்வர பரமதயாகர (கணநாதா)

வையமதனின்ஞான வான்களுளத்தாதீன
தய்யனேயரிபுதரன் றுதிக்கிசைந்தருண்மோன
துரியாநந்தமய தூய்தமிழ்முனிபணி
திருநதிக்கிரியுறை திருமணகுணமணி (கணநாதா)

கீர்த்தனம் இராகம் - [illegible] - ஆதிதாளம்.

பல்லவி.

திருவருள் [illegible] தேவனே (திரு)

சரணங்கள்.

அருமறைமூலா வருங்கருணைசீலா
பரமனருளபாலா பாவனவேமேலா (திரு)
வலலபைபாகா வரமருடியாகா
சொல்லரியயோகா சுகுணவைபோகா (திரு)
சிததிபுத்திநாதா திவ்யப்ரத்யாதா
அததிமுகப்போதா அடியேன்மிசைவாதர (திரு)
சுந்தரமுருகன துதியைத்தமிழின
சந்தவின்பமுடன சாறறப்பார்கடை-க்கண் (திரு)
திருநதிக்குன்று திகழுபவநனறு
அரிபுதரற்கினறு அருள்செயுமொன்று (திரு)

1. சிவசுப்ரமணியர் கீர்த்தனம் இராகம் - ஆரபி - ஆதிதாளம்.

பல்லவி.

வேலா யுமைபாலா வடிவேலா

அநுபல்லவி.

ஆலாலமுண்டசிவ னருட்குருபரவடி (வேலா)

சரணங்கள்.

திடமுடனேகுறவர் மடயயிலுந்தெய்வதப்
பிடியொடுமெயின்மிசை வாராய் - வர்
தடிமைவினையகலப் பாராய் - ஒளி
வடிவேமறை முடிவே செடிய வடி (வேலா)
அத்திமுகற்கிளைய நித்யகலயாணகுண
பததராக்ஷகததி ஈது - பரி
சுத்தகுருவௌவங் தோது - அரு
ளத்தா சுர மித்ர சித்ர வடி (வேலா)
திருநதிக்கிரியிலி லுறைசரவணபவ
பரிவுடனேயுனை காடித் - தின
மரிபுத்திரனபதம் பாடித் - தொழு
அருக வரந் தருக முருக வடி (வேலா)

2. கீர்த்தனம் இராகம் - [illegible] - [illegible] தாளம்.

பல்லவி.

முருகாவுனை நம்பினேன் மயிலினமிசை
வருவாயினி யெர்தனமுன

அநுபல்லவி.

தருணமித்வென்க் கருளவோதரு
பெருமையுடனென்முக் கருளிமகிழ்திரு (முருகா)

சரணங்கள்.

வடிவேல்கார்தாங்கியே வலிமையுற
கொடிப்போரினிலோங்கியே
திடமிகுங்கொடுஞ்சூரனுகிய திரனைச்சூரனை
முடியின்மணிபொடி படவுமவனைகெடு
வடியோடிருபிள் வண்டயவேவிடு (முருகா)

நயமேவியகுகனே நதியணியுங்
கயிலாயசிவன்மகனே
குயிலின்மொழிவள்ளி தெய்வகுஞ்சரி கூடவே நீடவே
சயிலமீமிசைப் பயிலுமாதிரு
புயவரைகளொளி செயநிலவுதிரு
அறுமாமுகதீரா அடியாரகருள (முருகா)

கருணையனுகரா
அரிபுத்திரனமிழாமிதைக்கொளு மாதியேஜோதியே
பரவுமிருவினை யிரியவுரிமையா
வொருசொலருள்செய உனக்கெனருமையா (முருகா)

3. கீர்த்தனம் இராகம் - காபார் - ரூபகதாளம்.

பல்லவி.

கண்டுகொண்டேன கண்களிக்கக கண்டுகொண்டேன

அநுபல்லவி.

கண்டேன்கருமலி பண்டாமபவப்பிணி
காலறுந்தோடவே வேலவன்சேவடி (கண்டு)

சரணங்கள்.

கந்தமாதனமலிட டிந்திராதியரைக
காததிட்டவுயர மார்ததமதாகவே
செந்திலகரினில் வந்தெழுந்தவுணத்
தீபகுலம்மறக் காயந்தகர்தனையான் (கண்டு)

பண்டிதர்ர்ப்புகழ் ... மண்டபமண்டலப்
பங்களார்ட்டினிற் ... நுனமில
தொண்டர்... யன ... பண்பெருசிந்தவை
சுந்தரச்சேவடி ... பரிபூரண் (கண்டு)

4. கீர்த்தனம் இராகம் - பியாக தாளம் - ரூபகம்.

பல்லவி.

சரணம சண்முகநாதா இது
சமயசுகாவா பொற்பாதா

அனுபல்லவி.

பரமகுருவேபகர்மறை மூலா
பக்தியுமைபாலா சீலா (சரணம)

சரணங்கள்.

வளளிகுஞ்சரிமகிழுமணாளா வானோர்முனிவர்போற்றுந்தாளா
துளளிமயிலின்மீதிலேவரு சுப்ரமணியேதொண்டர்தமபணியே (சரணம)

படியிலுதித திந்நாள்களாத்துன பத்திநூழ்ன்றுபாழ்க்கிறைத்துமன
கடலைத்தகைமையாவுமகற்று ... நானமறைதுதிநாதனேதநி (சரணம)

திருநதிக்குனறிற்றிகழுமாதி திருமுருகாவுனசெய்யகியாதி
பரிவுடனரிபுத்ரனிதமும் பாடித்துதிக்கப்பவம்சேதிக்கச் (சரணம)

5. கீர்த்தனம் இந்துஸ்தான் - காபி - தாளம - சாபு

பல்லவி.

ஆறுமுகவேலவனே யமரர்தங்கோனே விழி
யனலில்வந்தோனே தெவிட்
டாதசெந்தேனே (ஆறுமுக)

பாருமிந்தவேளைதுணை யாருமில்லையடியனேனைப்
பாதசமூவாசைநனி பாழ்படுத்துதே மனம்
பரதவிக்குதே தயை
பண்ணுமிப்போதே (ஆறுமுக)

காயமிதுமெய்யென்றெண்ணிக் காரிகையாராமையனண்ணி
மாயமாமலையிற்சிக்கி மதியுங்கெட்டேனே - உனை
மறந்துவிட்டேனே நமன
வருதறபட்டேனே (ஆறுமுக

திராசூரசமமாரா — தெய்வயானைவள்ளிமாரா
திராவிளைகளெல்லாந் — தீரத்தருள்வோனே - வே
றிகழ்கரத்தோனே — மலி

திறச்சவானே — (ஆறுமுக)
திருநதிக்கிரியில்வாசா — சிவசுதசண்முகதேசா
அரிபுத்திரன் [illegible] — யாதரிப்பாயே - யடி
யார்க்குறுதாயே — வினை
யனைத துங்கொய்வாயே — [illegible] (ஆறுமுக)

6 கீர்த்தனம் இராகம் - காம்போதி - அடதாளம்.

பல்லவி.

அப்பாவுன்றனையல்லா — லடியேன்றனக்கினி
யார்தான துணையையனே

அனுபல்லவி.

செப்பமுடியாவினை — வைப்பாய்வதிந்தேனீதா
னைப்போதினுனருளசெய்வாய் இடரனைத்தையுங்கொய்வாய் (அ)

சரணங்கள்.

வையகந்தனில்வந்து — வாழுநகளொலாகொந்து
உய்யுநெறியுதனை — யோராமலலமந்து
ஐயோவீணுகினே — ஞறுமாமுகதேவா
ஆதியந்தமிலாத — சோதிமஹாநுபாவா (அப்பா)

பத்தரகூநகவுந்தன் — பாதந்துதிக்கவெந்தன
சிததந்திருததுவாய் — திருவருளுருவாய்மன்
சிதரமயிலின்மிசைத — திகழுந்தெய்வமேயரி
புத்திரனேதிய — புனறமிழிசைப்பரி (அப்பா)

7. கீர்த்தனம் இராகம் - பியாக - அடதாளசாப்பு.

பல்லவி.

வாராயோ வாராயோ கந்தா — வரதன்மைந்தா (வாரா)

சரணங்கள்.

சீரானமாமயிலூசோ — திருநதிக்குன்றினிலார்
தாராருந்தண்டபாணியே — தயாநிதியே (வாரா)
வளளிக்குகந்தமாரா — வானவர்கள்போற்றுந்தீரா
தாளிமயிலேறியேநன்று — அலங்கவின்று (வாரா)

குன்றமெறிந்தவனே குருபரசண்முகனே
இன்றெனக்கருள்செயுங்கோனே யீடொருவனிலானே (வாரா)
திருமலிமுருகா சிவசுதவேள்முருகா
அரிபுத்திரன்முனுய்யவே அருள்செய்யவே (வாரா)

கீர்த்தனம் - இந்துஸ்தான் - ஆதிதாளம்.

சங்கரன்றருபுத்ரனே சடாக்கரா சாமிசகோதய ஞானசம்பீரா
ஐங்கரகஜதிருசோதரா அமலாரணமறியாதவுதாரா (சங்கர)

திருச்செந்திலினுறைகின்ற குருபரனே தினகரகோடிபோலவனதணியே
அருட்குருவடிவேயானந்தத்தனியே அறபுதபதமுனனுவார்சகுருகனியே

தேவகுஞ்சரியுளஞ்செழிதருலோலா செவ்வியமாமறைதேரனுகூலா
மூவருந்தினந்துதிமுழங்குறுமூலா முக்குணரகிதமுகாமபுயசீலா (சங்கர)

கந்தமிகுந்தநற்கரும்பேசேந்தனே கருதியகிரணக்கடைக்கணிதகோனே
சிந்தைமகிழ்ந்துனைத்தினந்தினந்தொழும் இவினையொழிந்திடச்செய்தயை

சூரசமமாரதுரந்தரவீரதோகையாமயின்மிசைத்துலவுகுறுதீரா[கொண்டு
கோரபவப்பிணிகுறைதரவாட்டும் கோலந்தவிர்த்தடியாகுழுவினிறகூட்டும்

சமபிரமசரவணசற்குருநாதா தமிழமுனிக்குதவியதற்பரபோதா
அமபுவியருமமரருந்திபாதா அருள்வடிவமாயவிர்தருதாதா (சங்கர)

சித்திரமிகுசிகரகோபுரமே திகழ்திருநதிக்குனறிற்சேர்ந்துளபரமே
அதநனேயுனையனறியாந்துணையாரோ அரிபுத்திரனெனையங்கீகரிப்பாரோ

மங்களம் இராகம - ஆனந்தபைரவி - தாளம - ஜம்பை.

பல்லவி.

ஜயமங்களம் நித்யசுபமங்களம்

சரணங்கள்.

கயமுகவிநோதப்ர காசமணப்பிள்ளைக்கும்
வயமிலகுசித்திபுத்தி வல்லபைகளுக்கும
பயமகற்றிடுதண்ட பாணியாம்பரமனுக்கும
பாலசுப்ரமண்யருக்கும் பாவையருக்கும (ஜய)

சத்திவடிவேலினுக்குந் தாங்குமெழிற்சித்ததேர்களுக்கும
கொதததுபதவாயுதமாங் கொடிக்கும
சுத்தநவவீரருக்குந் துலங்குமோரிலக்கருக்கும
சிததவித்யாதராமுதலாந் தேவருக்கும (ஜய)

மரகதப்பூங்கொடியார்க்கு மாணூர்சம்பீசருக்கும்
அர்வண்ணியன்டியருக்கு மந்தணார்க்கும்
பரவுமக்கிராமணிக்கும பாட்டர்வெண்ணற்றினுக்கும்
திருத்திருன்றாகர்க்கும் இனத்தினரும் (ஜய)

சுந்தரமலயமுனி தூயபதகமலத்திற்கும
பைந்தமிழ்தன்மாக்கள் பாவலர்க்கும்
மைந்தனுமரிபுத்ரன் வழுத்தியவிப்பாக்களுக்கும்
சந்திருக்கடலாடைச் சகத்துயிர்க்கும் (ஜய)

மங்களம் இராகம் - ஆநந்தபைரவி - ஜம்பை.

பல்லவி.

மங்களம் மங்களமே
முரணியுடு சாற்றுதமே.

சரணங்கள்.

கங்கையருள்கண்யனுக்குக் காத்தருளும்புண்யனுக்குப்
பொங்கருள்வடிவனுக்கும் புகழ்த்தண்டபாணியற்கு (மங்களம்)

செங்கைவேன்முருகனுக்குச் சிவசுப்ரமண்யனுக்கு
மங்கைவள்ளிகுஞ்சரிக்கு வாகுடையசிநிதனக்கு (மங்களம்)

திருமணப்பிள்ளையர்க்குத் தேவீஜம்பீசருக்கு
அரிபுத்திரனதமிழ்க்கு அரியதிருன்றத்திறகு (மங்களம்)

முற்றிற்று.